13.11.2024

**OS. 242 / 2023 வா. சா. 2. பாண்டித்துரை , த/பெ. கருவன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நானும் வாதியும் ஒரே ஊரைசேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் வீட்டிற்கும் வாதி வீட்டிற்கும் சுமார் 50 மீட்டர் தொலைவுதான். நானும் வாதியும் விவரம் தெரிந்த நாள் முதல் நண்பர்கள். பிரதிவாதியின் பெயர் லட்சுமி. 20.06.2016 ஆம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்று எனக்கு எப்பொழுது தெரியவந்தது என்றால் அதற்கு முதல் நாளே தெரியவந்தது. சார்பதிவாளர் அலுவலகம் எங்கள் ஊரில் இருந்து சுமார் 15 கீமி தொலைவாகும். 20.06.2016ம் தேதி காலை 8 மணிக்கு நானும் வாதியும் பதிவு அலுவலகத்திற்கு கிளம்பினோம். நண்பர் என்கிற முறையில் பணம் கொடுப்பது சம்பந்தமாக 19.06.2016 வாதி எனக்கு சொன்னார். ரூ. 4 லட்சம் கொடுப்பதாக சொன்னார். அந்த தொகையை எனது வீட்டில் வைத்து கொடுப்பதாகவும் சொன்னார். மொத்த தொகை 9 லட்சம் என்றும் 20 ம் தேதி ரூ 4 லட்சம் கொடுக்க இருப்பதாகவும், பாக்கி 5 லட்சம் பத்திரம் பதிவு செய்யும் பொழுது கொடுப்பதாக சொன்னார். 19 ம் தேதிக்கு முன்பு வழக்கு சொத்தை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. அதற்கு பிறகும் பார்க்கவில்லை. 19.06.216 ம் அன்று என்னிடம் வாதி மீதி தொகை ரூ 5 லட்சத்தை 1 வருடத்துக்குள் கொடுத்து பதிவு செய்யவுள்ளதாக என்னிடம் தெரிவித்தார். எதற்காக ஒரு வருடம் காலம் நிர்ணயம் செய்யப்பட்டது என்பது குறித்து வாதி என்னிடம் சொல்லவில்லை.எனக்கும் தற்பொது வரை தெரியாது. 19 ம் தேதிக்கு முன்பு ரூ 9 லட்சம் எங்கு வைத்து நிர்ணயம் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. 20.06.2016 க்கு பிறகு 1 ஆண்டு காலம் துபாயில் இருந்தார். 20.06.2016க்கு பிறகு எத்தனை நாட்களுக்கு பிறகு வாதி துபாய் நாட்டிற்கு சென்றார் என்றால் தெரியாது. இவ் வழக்கில் சொத்து தொடர்பான வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தப்பட்ட சொத்தின் விஸ்தீரணமோ சர்வே எண்னோ எனக்கு தெரியாது. எனக்கு வாதிக்கும் எந்த ஒரு சண்டையோ விரோதமோ கிடையாது. அவர் சாட்சியம் அளிக்க என்னை அழைத்து நான் வர மறுக்க வில்லை. இந்த வழக்கில் 15.04.2024 அன்று சாட்சியம் அளிக்க அழைப்பானை வந்தது. அப்போது நீதிமன்றத்தில் ஆஜரானேன். அதற்கு பின்னிட்டு எத்தனை வாய்தாக்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. 20.08.2024 மற்றும் 05.09.2024 ஆகிய தேதிகளில் நான் வரவில்லை என்றால் வந்தேன். 16.10.2024 ம் தேதி வாதி ஆன எனது நண்பர் அழைத்தன் பெயரில் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் அதை மறைப்பதற்காக நீதிமன்றத்தில் அதற்கு முன்பு 2 வாய்தாக்கள் ஆஜரானதாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

16.10.2024 தேதி சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை. என்னை செயற்கையாக தனிப்பட்ட சாட்சியாக காட்டுவதற்காக பெயரளவில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை அனுப்பட்டடுள்ளது என்றால் சரியல்ல. நான்கூறும் 4 லட்சம் ரூபாய் வாதி வங்கிகணக்கில் இருந்து எடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தொகை குறித்த விவரங்கள் மற்றும் 6 செண்ட் என்று சொல்லியுள்ள விவரங்கள் வாதி சொல்லியுள்ள அடிப்படையில் தான் எனக்கு தெரியும். நான் சொல்வது போல் ரூ 4 லட்சத்தை வாதி பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றாலும் ரூ 5 லட்சத்தை ஒரு வருட காலம் பதிவு செய்ய ஒப்புக் கொண்டார்கள் என்பதும் பொய் என்றால் சரியல்ல. கிரையம் சம்பந்தமாக எந்த ஒரு தொகையும் கொடுக்கபடவில்லை என்றாலும் சரியல்ல. வாதி எனது நண்பர் என்ற முறையில் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் தவிற கூடுதலாக என் தரப்பில் எந்த ஒரு விவரமும் சொல்வதற்கு இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.